## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு பதிவு செய்த மாணவர்களிடமிருந்து பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு, பரீட்சை விண்ணப்பங்கள் கோரல் - 2014 / 2015 (புதிய பாடத்திட்டம்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு பதிவு செய்த தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து முதலாம் வருட, இரண்டாம் பருவ ($1^{st}$ year, 2nd Semester) கருத்தரங்கு மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. தகுதி**

முதலாம் வருட முதலாம் பருவ இறுதிப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் தோற்றியிருக்க வேண்டும்

**2. விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல்**

- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.seu.ac.lk/cedpl/) அல்லது நேரடியாக அல்லது தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

  தபால் மூலமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர். ரூபா 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயவிலாசமிடப்பட்ட 9”X4” அளவிலான தபாலுறையை அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பதிவு இலக்கத்துடன் (Registration No) “கருத்தரங்கு, பரீட்சைக்கான விண்ணப்பம்” எனவும் அவசியம் குறிப்பிடல் வேண்டும்.

**3. விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முறை**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 06.02.2017 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்:

Assistant Registrar,
Centre for External Degrees & Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka
Oluvil # 32360

**4. விண்ணப்ப முடிவுத் திகதி: 06.02.2017**

**5. கட்டண விபரம்:**

| வெளிவாரிப் பட்டப்படிப்பு | கட்டணம் (ரூபா) |
|---|---|
| கலைமாணி | 7,500.00 |
| வியாபார நிர்வாகமாணி | 17,500.00 |
| வணிகமாணி | 17,500.00 |

முதலாம் வருட இரண்டாம் பருவ கற்கைநெறிக் கையேடு, கருத்தரங்கு, பரீட்சை போன்றவற்றுக்கான சகல கட்டணங்களும் இதில் அடங்குகின்றன..

6. **விண்ணப்பதாரிகளின் கவனத்திற்கு:**

- பரீட்சைகளுக்கு முன்னர், பரீட்சை முன்னோடிக் கருத்தரங்குகள் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்), மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கருத்தரங்கு நிலையங்கள் மாறுபடலாம். ஆயினும் வணிகமாணி கற்கைநெறிக்கான கருத்தரங்குகள் யாவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே நடைபெறும்.
- இக்கருத்தரங்கில் தொடர் மதிப்பீடு நடாத்தப்பட்டு (Continuous Assessment) ஒவ்வொரு பாடத்துக்குமான மொத்தப் புள்ளியில் 30 வீதமான புள்ளிகள் இத்தொடர் மதிப்பீட்டுக்கு வழங்கப்படும்.
- பரீட்சைகள் யாவும் அம்பாறை மாவட்டத்திலேயே நடைபெறும் (தென்கிழக்குப் பல்கலைக் கழகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நிலையங்கள்).
- இக்கருத்தரங்கிற்கு மாணவர்களின் **வரவு மிக அத்தியாவசியமாகும்**. இதில் மாணவர்களுக்கான கற்கை நெறிக் கையேடுகளும் (Course Manuals) தொடர் மதிப்பீட்டு வினாக்களும் வழங்கப்படும்.
- பூரணப்படுத்தப்படாத, மற்றும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 067-2052801

**பதில் பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**08.01.2017**